5th September 1960]

District Development Council

*442 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களுக்கு பத்திரிகை நிருபர்களை அனுமதிக்கும் விஷயமாக சர்க்கார் முடிவுக்கு வந்து விட்டார் களா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri S. M. ANNAMALAI : முன்பு இப்படிப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்போது இது பரிசீலனையில் இருக்கிறது என்று சர்க்கார் பதில் அளித்திருக்கிறார்கள். அந்தப் பரிசீலனை செய்வதற்கு இவ்வளவு கால தாமதம் ஆவதற்கு காரணம் என்ன ? அதில் என்ன கஷ்டங்கள் இருக் கின்றன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஒவ்வொன்றுக்கும் விதிகள் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த டெவலப் மெண்ட் கவுன்சில் விஷயமாகவும் விதிகள் செய்ய வேண்டியதாக இருக் கிறது. அதற்கு வேண்டிய ட்ராப்ட் ரூல்ஸ் தயாராகி அவைகள் எல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது. கூடிய சீக்கிரம் அது வெளியிடப்படும்.

Sri C. NATARAJAN : சில மாவட்டங்களில் சர்க்காருடைய அனுமதி இல்லாமல் அங்கங்கு நடைபெறுகிற கூட்டங்களுக்கு பத்திரிகை நிருபர்களை வைத்துக்கொண்டு அவைகளை நடத்துகிறார்கள். அதைத் தடை செய்வதற்கு அவர்கள் வராமல் நிறுத்துவதற்கு அரசாங்கம் தடை செய்ய முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அது அங்கங்கே இருக்கிறவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்து இருக்கிறது. அனுமதிக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி அங்குள்ளவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அவர்களை அனுமதிப்பதில் பெரிய ஆட்சேபணை இருப்ப தாகத் தெரியவில்லை.

Leasing of devasthanam lands to agriculturists

*443 Q.—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1959, 1960-ல் சேலம் டிவிஷன் இந்துமத அற நிலையப் பாதுகாப்பு போர்டுக்குச் சேர்ந்த கோவிலுக்கும், தேவஸ்தானங்களுக்கும் சொந்தமான எத்தனை ஏக்கரா நிலங்கள் ஏலத்தில் விடப்பட்டு விவசாயிகளுக்கு குத்த கைக்கு விடப்பட்டன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 637·07 acres of dry lands and 45·62 acres of wet lands.

Community Development Schemes in North Arcot district

*444 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர் கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1955-ம் வருடம் பிப்ரவரி மாதம் 28-ந் தேதிய 640 நெ. சர்க்கார் உத்திரவுப்படி 1959-60-ம் ஆண்டில் வடாற்காடு மாவட்டம், போளூர், கலசபாக்க சமுதாய நலத் திட்டங்களில் அனுமதிக்கப்பட்ட வேலைகள் எத்தனை?